பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

23 05 2026 12 40

சனிக்கிழமை நண்பகல்

ஆகாஷ்வாணி

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

1. இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் பங்கெடுக்க உலகமே ஆவலுடன் காத்திருப்பதாக **பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**

2. **அரசுத் திட்டங்களின் பலன்கள் எளிமையாகவும்**, **தடையின்றியும் மக்களைச் சென்றடைய வேண்டும்** என்று **மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் வலியுறுத்தியுள்ளார்.**

3. **பெட்ரோல் மற்றும் டீசல் விலை லிட்டருக்கு** 91 **பைசா உயர்த்தப்பட்டுள்ளது**.

4. நான்கு நாள் பயணமாக இந்தியா வந்துள்ள அமெரிக்க வெளியுறவத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ **பிரதமர் திரு. நரேந்திர மோடி**யை சந்தித்துப் பேசுகிறார்.

5. ஆசிய டேக்வாண்டோ சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Kashish Malik அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

.... இனி விரிவான செய்திகள் ...

<<<<>>>>

இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் பங்கெடுக்க உலகமே ஆவலுடன் காத்திருப்பதாக **பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**

காணொலி வாயிலாக 19வது வேலைவாய்ப்புத் திருவிழாவை தொடங்கி வைத்து உரையாற்றிய அவர், நாட்டில் இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளையும், உலகளாவிய அனுபங்களையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு உலகின் பல்வேறு நாடுகளுடன் இந்தியா கூட்டாண்மை அடிப்படையில் செயல்பட்டு வருவதாக கூறினார்.

உலக நாடுகளின் நம்பகமான நண்பனாக இந்தியா உருவெடுத்து வருவதாகவும் அவர் **கூறினார்.**

2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவதற்கு ஒவ்வொரு இந்தியரும் உழைத்து வருவதாகவும், அந்த இலக்கை எட்டுவதற்கு பல துறைகளில் தமது அரசு முதலீடு செய்து வருவதாகவும் **கூறினார்.**

இதன் மூலம் இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருவதையும் அவர் எடுத்துரைத்தார்.

இன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு திருவிழாவில் பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் அமைப்புகளில் சேர்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 51 ஆயிரத்துக்கும் அதிகமான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

இந்த திருவிழா நாடு முழுவதும் 47 இடங்களில் நடைபெற்றது.

இன்று பணி நியமன ஆணைகளைப் பெற்றவர்கள், ரயில்வே அமைச்சகம், உள்துறை அமைச்சகம், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் மற்றும் உயர்கல்வித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பணியாற்ற உள்ளனர்.

தமிழகத்தில் சென்னை ஐ.சி.எஃப்பில் நடைபெற்ற விழாவில் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்துகொண்டு இளைஞர்களுக்கு பணி நியமன கடிதங்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தேசத்தைக் கட்டமைக்க இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதாக கூறினார்.

(Voice Byte – Dr. L. Murugan – 57 Sec)

<<<<>>>>

**இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படையின்** மகளிர் குழு முதலாவது **சர்வதேச மலையேற்றப் பயணத்தை வெற்றிகரமாக** நிறைவு செய்துள்ளது.

இந்த மகளிர் குழு எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து சாதனை படைத்துள்ளது.

11 **பெண்கள் மற்றும் மூன்று தொழில்நுட்ப உதவிப் பணியாளர்கள் என** 14 **உறுப்பினர்களைக் கொண்ட இந்த குழு**, நேற்று முன்தினம் நேபாள **பகுதியிலிருந்து** South Col **பாதை வழியாக உலகின் மிக உயர்ந்த சிகரத்தை அடைந்ததாக இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படை வெளியிட்டுள்ள** அறிக்கையில் **தெரிவித்துள்ளது.**

**கடந்த** மாதம் 19**ஆம் தேதி** இந்த மகளிர் குழு தனது பயணத்தை தொடங்கியது.

"**தூய்மையான இமாலயம் - பனிப்பாறைகளைக் காப்போம்"** **என்ற தங்களது பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக**, **இக்குழுவினர்**

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், எவரெஸ்ட் சிகரத்தில் இருந்து மட்காத கழிவுகளையும் சேகரித்தனர்.

எவரெஸ்ட் சிகரத்தில் தேசியக் கொடியை ஏற்றிய இக்குழுவினருக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கடுமையான தட்பவெப்ப நிலையிலும் இந்த அசாத்திய சாதனையை இந்தக் குழு நிகழ்த்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சாதனையின் மூலம், ஐந்து வெற்றிகரமான எவரெஸ்ட் சிகரப் பயணங்கள் உட்பட மொத்தம் 232 மலையேற்றப் பயணங்களை இந்தோ-திபெத்திய எல்லைக் காவல்படை நிறைவு செய்துள்ளது.

<<<<>>>>

அரசுத் திட்டங்களின் பலன்கள் எளிமையாகவும், தடையின்றியும் மக்களைச் சென்றடைய வேண்டும் என்று மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகங்களின் மூத்த அதிகாரிகளுடன் நடைபெற்ற உயர்மட்ட ஆய்வுக் கூட்டத்தின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

குறை தீர்க்கும் அமைப்புகளை வலுப்படுத்தவும், அவற்றை பொறுப்புணர்வுடனும், விரைவாக செயல்படக்கூடியதாகவும் மாற்றுமாறு வேளாண்மை, ஊரக வளர்ச்சி மற்றும் நில வளங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை சார்ந்த துறைகளுக்கும் நிறுவனங்களுக்கும் அமைச்சர் உத்தரவிட்டார்.

புகார்கள், பொதுமக்களின் குறைகள், மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து வரும் கோரிக்கைகள், குடிமக்களின் கடிதங்கள் மற்றும் பல்வேறு இணையதளங்களில் எழுப்பப்படும் பிரச்சினைகளை நாள்தோறும் ஆய்வு செய்வதற்காக, வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகங்களில் தலா 10 அதிகாரிகள் கொண்ட சிறப்புக் குழுக்களை அமைக்குமாறு திரு. சவுகான் அறிவுறுத்தினார்.

மேலும், நடைமுறைகளை எளிமைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், காலாவதியான மற்றும் தேவையற்ற விதிமுறைகளை நீக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

நிர்வாகத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

வேளாண்மை, ஊரக வளர்ச்சி, நில வளங்கள் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் ஆகிய துறைகளில் செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் தளங்கள், தரவுப் பகிர்வு, தரவு அடிப்படையிலான முடிவெடுத்தல், கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு ஆகியவை வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் திரு. சிவராஜ் சிங் சவுகான் கூறினார்.

<<<<>>>>

ரிசர்வ் வங்கி 2025-26 நிதியாண்டிற்கான உபரி நிதியில் இருந்து 2 லட்சத்து 86 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அரசுக்கு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

இது ரிசர்வ் வங்கியால் வழங்கப்படும் மிக உயர்ந்த லாப பங்கு தொகைகளில் ஒன்றாகும்.

மும்பையில் ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையில் நடைபெற்ற இயக்குநர்களின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், 2025-26 நிதியாண்டில் மொத்த வருமானம் 26 புள்ளி நான்கு இரண்டு சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், செலவினம் 27 புள்ளி ஆறு சதவீதம் உயர்ந்துள்ளதாகவும் ரிசர்வ் வங்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இக்கூட்டத்தில், உள்நாட்டுப் பொருளாதாரச் சூழல், எதிர்காலக் சவால்கள் குறித்தும், 2025-26 நிதியாண்டிற்கான ரிசர்வ் வங்கியின் ஆண்டு கணக்குகள் குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டது.

<<<<>>>>

பெட்ரோல் மற்றும் டீசல் விலை லிட்டருக்கு 91 பைசா உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த பத்து நாட்களுக்குள் மூன்றாவது முறையாக இதன் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

தில்லியில், பெட்ரோல் விலை 87 பைசா உயர்த்தப்பட்டு லிட்டருக்கு 99 ரூபாய் 51 பைசாவாகவும், டீசல் விலை 91 பைசா உயர்த்தப்பட்டு லிட்டருக்கு 92 ரூபாய் 49 பைசாவாகவும் அதிகரித்துள்ளது.

அண்மை நாட்களில் பெட்ரோல் விலை லிட்டருக்கு 5 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

மேற்காசியாவில் நிலவும் சூழலால் கச்சா எண்ணெய் விலையில் ஏற்பட்டுள்ள கடுமையான விலை உயர்வு காரணமாக இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

<<<<>>>>

அமெரிக்க வெளியுறவத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ நான்கு நாள் பயணமாக இன்று காலை இந்தியா வந்தடைந்தார்.

வெளியுறவுத்துறை அமைச்சராக அவர் இந்தியா வருவது இதுவே முதல்முறையாகும்.

அவரது இந்தப் பயணத்தில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது, வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் இந்தோ - பசிபிக் உத்திசார் ஒத்துழைப்பு ஆகியவை குறித்து விவாதிக்க உள்ளார்.

கொல்கத்தா வந்துள்ள அவர், அன்னை தெரசாவின் மிஷனரிஸ் ஆ்ஃப் சாரிட்டி தலைமையகத்தில் உள்ள குழந்தைகள் இல்லத்திற்கு நேரில் சென்று அவர்களுடன் கலந்துரையாடினார்.

இன்று பிற்பகல் புதுதில்லி பயணம் மேற்கொள்ளும் அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசவுள்ளதாக இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

CBSE 12ஆம் வகுப்பு மாணவர்கள் விடைத்தாள் நகலைப் பெறுவதற்கான கால அவகாசம் நாளை வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தங்களது விடைத்தாள் நகல்களைப் பெற்ற பிறகு, மதிப்பெண் சரிபார்ப்பு அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க இரண்டு நாட்கள் வரை கால அவகாசம் இருக்கும் என்று சிபிஎஸ்இ தெரிவித்துள்ளது.

இந்த கால அவகாசத்தை மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு சிபிஎஸ்இ கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

பிரிக்ஸ் மகளிர் பணிக்குழுவின் இரண்டாவது கூட்டம் மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் நடத்தப்பட்டது.

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் செயலாளர் அனில் மாலிக், நேற்று நடைபெற்ற காணொலி காட்சி வாயிலான கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

கூட்டத்தின் போது, இந்தியாவின் பிரிக்ஸ் தலைமைத்துவத்தின் கருப்பொருளான "மீள்தன்மை, கண்டுபிடிப்பு, ஒத்துழைப்பு மற்றும் நிலைத்தன்மைக்கான உருவாக்கம்" என்பதன் கீழ், பகிரப்பட்ட முன்னுரிமைகளை முன்னோக்கி எடுத்துச் செல்வதில் பிரிக்ஸ் உறுப்பு நாடுகளுக்கு இடையே தொடர்ச்சியான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை திரு. மாலிக் எடுத்துரைத்தார்.

இதில் பங்கேற்ற பிரிக்ஸ் உறுப்பு நாடுகள், பன்முக ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும், தொழில்முனைவோர் திறனை மேம்படுத்துவதற்கான கட்டமைப்பு உள்ளிட்ட முக்கிய முன்னுரிமைப் பகுதிகளில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவது குறித்தும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டன.

<<<<>>>>

ஆசிய டேக்வாண்டோ சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Kashish Malik அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

உலான்பாட்டரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவு காலிறுதிச் சுற்றில் மங்கோலியாவின் Munkhjin Battseren-ஐ வென்றார்.

-----------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று லக்னோ அணி - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<The End>>>>